# வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

## 6th Std – Lesson 1

**1] தமிழகத்தில் டைனோசரஸ் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ள இடம் எது?**

அரியலூர் பகுதியில் டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**2] நமக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பற்றிய தகவல்களை ஆதாரங்களுடன் தொகுத்துக் கால வரிசைப்படி கூறுவது யாது?**

வரலாறு.

**3] தமிழ்நாட்டில் 100 ஆண்டுகளாக அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடந்து வரும் இடம் எது?**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூர்.

**4] கி.பி 2004-இல் 160 முது மக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடம்?**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூர்.

**5] எவற்றை வரலாற்று ஆதாரங்கள் என்கிறோம்?**

மக்கள் வாழ்ந்த காலம், அக்கால நிகழ்வுகள், உணவுமுறை, பண்பாடு, பழக்க வழக்கம், ஆட்சிமுறை, கலை, இலக்கியம் போன்றவற்றைப்பற்றி அறிய உதவும் எழுதப்பட்ட ஆதாரங்கள் மற்றும் பழங்காலப் பொருள்கள் முதலியன வரலாற்று ஆதாரங்கள் எனப்படும்.

**6] வரலாற்றை எத்தனை காலகட்டங்களாக பிரிக்கலாம்?**

பொதுவாக, வரலாற்றுக் காலம், வரலாற்றுக்கு முந்தையகாலம் என்று வரலாற்றினை இரு காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம்.

**7] வரலாற்றுக்காலம் என எதை கூறுகிறோம்?**

அக்கால மனிதர்கள் குறித்த எழுத்துப்பூர்வமான ஆதாரங்களும், பிற ஆதாரங்களும் கொண்ட காலத்தை வரலாற்றுக் காலம் என்கிறோம்.

**8] எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் என எதை கூறுகிறோம்?**

இலக்கியங்கள், வரலாற்றுக் குறிப்புகள், கல்வெட்டுகள், செப்புப் பட்டயங்கள், ஓலைச்சுவடிகள் போன்றவற்றை இத்தகைய எழுத்துப் பூர்வமான ஆதாரங்கள் எனலாம்.

**9] வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறிய உதவும் ஆதாரங்கள்?**

வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப்பற்றி அறிய அக்காலத்தைச் சார்ந்த பொருள்கள், சிதைவுகள், கற்கள், மரங்கள், விலங்குகளின் கொம்புகள், எலும்புகள், கற்கருவிகள், மண்டை ஓடுகள், படிமங்கள் போன்றவை உலகின் பல்வேறு பகுதிகளிலும்கிடைத்துள்ளன.

இந்தியாவிலும் பல்வேறு இடங்களில் சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டுஇந்தியாவின் தொல்பழங் காலத்தை அறிய முடிகிறது.

**10] வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

- பழைய கற்காலம் – Palaeolithic age (கி.மு. 10,000 ஆண்டுகளுக்கு முன்)
- புதிய கற்காலம் – Neolithic age (கி.மு.10,000 – கி.மு.4,000)
- செம்புக் கற்காலம் – Chalcolithic age (கி.மு.3,000 – கி.மு.1,500)
- இரும்புக் காலம் – Iron age (கி.மு. 1,500 – கி.மு.600)

என்று வகைப்படுத்தலாம்.

**11] கற்காலத்தை எவ்வாறு இரண்டாக பிரிக்கலாம்?**

ஆதிமனிதன் பயன்படுத்திய கற்கருவிகளைக் கொண்டு கற்காலத்தைப் பழைய கற்காலம், புதிய கற்காலம் என இரண்டாகப் பிரிக்கலாம்.

**12] பழைய கற்காலத்தில் பெண்களும் வேட்டையாடினர் என்பதை அறிய உதவும் சான்று?**

மடியில் குழந்தையைக் கட்டிக் கொண்டு ஒரு பெண் அம்பு விடுவது போன்ற ஓவியம் மத்தியப் பிரதேசத்திலுள்ள பிம்பேட்கா குகையில் உள்ளது.

இந்த ஓவியத்தால் பெண்களும் வேட்டையாடினர் என்பதை அறிய முடிகிறது.

13] இந்தியாவில் பழைய கற்கால கருவிகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள் எவை?

மத்திய பிரதேசம் – சோன் ஆற்றுப்படுகை, பிம்பேட்கா, ம்ஹேஸ்வா.

ராஜஸ்தான் – லூனி ஆற்றுச் சமவெளி.

கர்நாடகம் – பாகல்கோட்.

ஆந்திரப்பிரதேசம் – கர்னூல் குகைகள், ரேணிகுண்டா.

தமிழ்நாடு – வடமதுரை, அத்திரம்பாக்கம், பல்லாவரம், காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர்.

14] மனிதன் முதலில் பழக்கிய விலங்கு?

**நாய்**

15] மனித பரிணாம வளர்ச்சியின் அடுத்த படிநிலையை எவ்வாறு குறிக்கலாம்?

**புதிய கற்காலம்**

16] சக்கரம் உருவாக்கப்பட்ட காலம் எது?

**புதிய கற்காலம்**

17] முதலில் பயன்படுத்திய உலோகம் எது?

**செம்பு**

18] புதிய கற்காலக் கருவிகள் கிடைத்துள்ள இடங்கள்?

திருநெல்வேலி, தான்றிக்குடி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, சேலம்.

19] செம்பு கற்காலம் எவ்வாறு குறிக்கப்படுகிறது?

**செம்பு கற்கருவிகள் காலம்**

20] ஹரப்பா நகர நாகரீகம் எக்கால நாகரீகத்தைச் சார்ந்தது?

**செம்பு கற்காலம்**

21] இரும்பினால் கருவிகள் செய்த காலம் எது ?

இரும்பினால் கருவிகள் செய்த காலம் இரும்புக்காலம் எனப்படும். இக்காலத்தில் வீட்டுச்சாமான்களும், பயிர்த்தொழில் கருவிகளும் இரும்பினால் செய்யப்பட்டன. உலோகத்தை உருக்கிக் கருவிகள் செய்ய அறிந்திருந்தனர். அவர்களிடம் கற்பனைத் திறன் காணப்பட்டது. வேதகால நாகரிகம் இரும்புக் காலத்தைச் சார்ந்தது.